# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 215 | 4 Pages | 8.3.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tirupput |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 215 | 4 பக்கங்கள் | 8.3.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் பேராசிரியர் அன்பழகன்: முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, மார்ச். 8

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் கூறி இருப்பதாவது: "குலையா உறுதி, அசையாக் கொள்கை, தாழா மானம், மங்கா உணர்வு, மாறா நட்பு, மறையாப் புகழ் என இனிவரும் இயக்கத்து இளைஞர்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாய் வாழ்ந்த இனமானப் பேராசிரியர் நினைவுநாள்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. காலம் முதல் பொதுக் குழுவில் என்னைக் கழகத் தலைவராக அறிவித்தது வரை என் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அவர் நிறைந்திரு க்கிறார். என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார்! அவர்தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழிநடத்தும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மறுமணம் செய்து கொள்ளும் விதவைகளுக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படும்: ஜார்க்கண்ட் அரசு

ஜார்க்கண்ட், மார்ச். 8


ஜார்க்கண்ட் மாநிலத்தில் மறுமணம் செய்துகொள்ளும் விதவை பெண்களுக்கு ரூ.2 லட்சம் வழங்க உதவித்தொகை வழங்கபடும்

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மறுமணம் செய்துகொள்ளும் விதவை பெண்களுக்கு ரூ.2 லட்சம் வழங்க உதவித்தொகை வழங்க உள்ளதாக அம்மாநில பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக பேசிய பெண்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் சமூக நலத்துறையின் செயலாளர் மனோஜ் குமார், விதவைகள் கண்ணியத்துடன் வாழ இந்த திட்டம் உதவும் என்பதால், இதனை ஜார்க்கண்ட் அரசு அமல்படுத்தி இருக்கிறது. விதவைகள் தங்கள் திருமணப் பதிவுச் சான்றிதழுடன் விண்ணப்பிக்கலாம். மறுமணமான ஒரு வருடத்தில் அவர்களது வங்கி கணக்கில் 2 லட்சம் செலுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் அரசு 202425 நிதியாண்டில் ரூ.1.28 லட்சம் கோடி பட்ஜெட்டை தாக்கல் செய்தது. சம்பை சோரன் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## கர்நாடகா: 10ம் வகுப்பு பாடப்புத்தகத்தில் மீண்டும் சேர்க்கப்படும் பெரியார் பாடம்



கர்நாடகா, மார்ச். 8

2022,23 கல்வியாண்டுக்கான பாடத்திட்டங்களை கர்நாடகாவை ஆட்சி செய்த பாஜக அரசு மாற்றம் செய்தது. அதில், பத்தாம் வகுப்பு மாணவர்களின் புத்தகத்தில் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் நிறுவனர், ஹெட்கேவரின் உரைகள் இடம்பெற்றன. அதே சமயம் சமூக சீர்திருத்தவாதிகளான பெரியார், நாராயண குரு மற்றும் முகலாய மன்னர்களான திப்பு சுல்தான், ஹைதர் அலி குறித்த தகவல்கள் நீக்கப்பட்டது. இது கர்நாடகா அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், 202425 கல்வியாண்டுக்கான பாடத்திட்டங்களை காங்கிரஸ் அரசு மாற்றம் செய்துள்ளது. அதில் 10ம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்திட்டத்தில், மீண்டும் பெரியாரின் வாழ்க்கை வரலாறு, சமூகப் பணிகள் குறித்த பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதே சமயம் சாவித்ரிபாய் பூலே அவர்களின் பாடமும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் மஞ்சுநாத் ஹெக்டே தலைமையிலான பாடநூல் திருத்தக் குழு, இத்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

இருப்பினும், நீக்கப்பட்ட திப்பு சுல்தான், ஹைதர் அலி தொடர்பான பாடங்களை மீண்டும் அறிமுகப்படுத்த இக்குழு பரிந்துரைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எனது வீட்டு போர்வெலும் வறண்டுதான் கிடக்கிறது: துணை முதல் மந்திரி ஆதங்கம்



பெங்களூரு, மார்ச். 8

கோடைகாலம் தொடங்கும் முன்பே பெங்களூர் நகரம் முழுவதும் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் டேங்கர் லாரிகளில் பொதுமக்களுக்கு மாநகராட்சி மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனாலும் போதுமான குடிநீர் இல்லாமல் பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

பெங்களூருவில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை போக்க கர்நாடக அரசு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில் கர்நாடக துணை முதல் மந்திரி கே.டி.சிவகுமார் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நான் இந்தப் பிரச்சனையை மிக மிக தீவிரமாகப் பார்க்கிறேன். அனைத்து அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தியுள்ளேன்.

அனைத்து தொட்டிகளையும் கையகப்படுத்தி அனைத்து நீர் கிடைக்கும் இடங்களையும் கண்டறிந்து வருகிறோம். 217 சுரங்கங்கள் முயற்சி செய்யப்பட்டுள்ளன.

பெங்களூரு நகரில் 3,000க்கும் மேற்பட்ட போர்வெல்கள் வறண்டு விட்டன. காவிரியில் இருந்து என்ன தண்ணீர் வருகிறதோ அதுதான் வருகிறது.

எனது வீட்டில் உள்ள போர்வெல் உள்பட அனைத்து போர்வெல்களும் வறண்டு கிடக்கின்றன என தெரிவித்தார்.

## ராமருக்கு நாங்கள் எதிரி: ஆ.ராசாவுக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம்

சென்னை, மார்ச். 8

முன்னாள் மத்திய மந்திரியும், தி.மு.க. மூத்த தலைவர்களில் ஒருவருமான ஆ.ராசா கோவையில் நடந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் சர்ச்சைக்குரிய சில கருத்துக்களை வெளியிட்டார். அவர் பேச்சு விவரம் வருமாறு: இந்தியா ஒரே நாடு அல்ல. இந்தியா எப்போதும் ஒரு நாடாக இருந்ததில்லை. ஒரு நாடு என்றால், ஒரே மொழி, ஒரே கலாசாரம், ஒரே பாரம்பரியம் இருக்க வேண்டும். அப்போதுதான் அது நாடாக இருக்க முடியும். அதனால் இந்தியா ஒரு நாடல்ல. அது ஒரு துணைக் கண்டம். தமிழ் ஒரு நாடு, மலையாளம் ஒரு நாடு, ஒடியா ஒரு நாடு. இந்த நாடுகள் அடங்கியதுதான் இந்தியா என்ற துணைக் கண்டம். நீங்கள் ஒன்றைக் காட்டி, இது கடவுள், இது ராமர் என்பீர்கள். பாரத் மாதா கி ஜே என்பீர்கள். ஆனால் நாங்கள் ஒரு போதும் ராமரை ஏற்க மாட்டோம். பாரத மாதாவையும் ஏற்க மாட்டோம். ராமருக்கு நாங்கள் எதிரி. இதை எங்கு வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆ.ராசாவின் இந்த பேச்சு பா.ஜ.க., காங்கிரஸ் தலைவர்களிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்தியா கூட்டணியில் உள்ள தலைவர்கள் ஆ.ராசாவின் பேச்சை ஏற்றுக் கொள்கிறீர்களா? ராகுல் காந்தி இந்த விஷயத்தில் மவுனமாக இருப்பது ஏன்? என்று பாரதிய ஜனதா கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சி ஆ.ராசாவின் பேச்சுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த கட்சியின் செய்தி தொடர்பாளர் சுப்ரியா டெல்லியில் நிருபர்களுக்கு பேட்டியளிக்கும் போது கூறியதாவது:

ஆ.ராசாவின் பேச்சை 100 சதவீதம் நாங்கள் ஏற்க மாட்டோம். அவரது பேச்சுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். கடவுள் ராமர் அனைவருக்கும் பொதுவானவர். ஜாதி, மதம் அனைத்துக்கும் அப்பாற்பட்டவர்.

ராமரின் வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் எடுத்துக் காட்டான ஒன்றாகும். ராமர் என்றால் பெருமை, ராமர் என்றால் அன்பு, ராமர் என்றால் நேர்மை என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

எனவே ஆ.ராசாவின் பேச்சை நாங்கள் முழுமையாக கண்டிக்கிறோம். அவரது பேச்சுக்கு எந்த ஆதரவும் இல்லை. இவ்வாறு காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா கூறினார்.




# செஞ்சியில் பேராசிரியர் க.அன்பழகன் நினைவு நாள் அனுசரிப்பு



செஞ்சி மார்ச் 8

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர திமுக சார்பில் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர்மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலஷ்மி செயல் மணி, நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜான் பாஷா, சங்கர், சீனிவாசன், சுமித்ரா சங்கர், பொன்னம்பலம், சிவகுமார், சங்கீதா சுந்தரமூர்த்தி, மகாலட்சுமி கமலநாதன், லட்சுமி வெங்கடேசன், நூர்ஜகான் ஜாபர்,மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரசூல் பாஷா, தொண்டரணி பாஷா,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி, பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அஞ்சலை செல்வகுமார், மாவட்ட தகவல் தொழில் அமைப்பாளர் பிரபு, செழியன், கோகுல்,பஸ் ஸ்டாண்ட் செல்லன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி விளாம்பட்டியில் தலைமையாசிரியர் திருமதி தனலெட்சுமி தலைமையில் 2024 2025 ஆம் கல்வி ஆண்டின் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியில் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் அனைவரும் கலந்து கொண்டனர்.

# கடலூர் நகராட்சி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் பூமி பூஜையை ரத்து செய்த மாநகராட்சி ஆணையர்



கடலூர் மார்ச் 8

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட 17 வது வார்டு வன்னியர் பாளையம் பகுதியில்மாநகராட்சிதொடக்கப் பள்ளி உள்ளது. இங்கு சுமார் 50 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் பள்ளி வளாகத்தில் அங்கன்வாடி செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் பள்ளி வளாகத்தில் பூங்கா அமைக்க வேண்டிய பகுதியில் கடலூர்மாநகராட்சிநிர்வாகம் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க திட்டமிட்டது .இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து ஆரம்ப சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென ஏற்கனவே மனு அளித்திருந்தனர். இந்த நிலையில் நேற்று பள்ளி வளாகத்திற்குள் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக பூமி பூஜை போடும் பணி நடை பெற்றது. அப்போது மாநகராட்சி ஆணையர் காந்திராஜ் அப்பகுதிக்கு வந்தபோது பொதுமக்கள் ஒன்று சேர்ந்து ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து அதனை வேறு இடத்திற்கு மாற்ற கோரி வேண்டுகோள் வைத்தனர்.

இதனையடுத்து மாநகராட்சி ஆணையர் அங்கிருந்து புறப்பட்டு சென்றார். அதன் பின்னர் அங்கு வந்த மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்து அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் அவர், ஆரம்ப சுகாதார நிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்படும் என உறுதி அளித்ததை தொடர்ந்து அங்கிருந்து பொதுமக்கள் அனைவரும் கலந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# வீட்டையும், நாட்டையும் மகளிரே வழிநடத்தும் சூழலை ஏற்படுத்துவோம்: அன்புமணி மகளிர் தின வாழ்த்து

சென்னை, மார்ச். 8

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உலகின் தவிர்க்க முடியாத சக்தியான மகளிரைப் போற்றும் உலக மகளிர் தினம் இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில், உலகெங்கும் வாழும் மகளிருக்கு உளமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களை ஆண்களுக்கு அடுத்தப்படியாக வைத்துப் பார்க்கும் மன நிலை விலக வேண்டும். நாட்டையும், வீட்டையும் தலைமையேற்று நடத்தும் வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்டால், அனைத்துத் துறைகளிலும் சாதனைகளை படைத்ததைப் போன்றே இதிலும் சாதிப்பார்கள்.

எனவே, வீட்டையும், நாட்டையும் மகளிரேவழி நடத்தும் உன்னத சூழலை உருவாக்குவதற்காக கடுமையாக உழைக்க மகளிர் நாளான இந்த நாளில் நாம் அனைவரும் உறுதியேற்போம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பெண்மையை வணங்குவோம் எடப்பாடி பழனிசாமி மகளிர் தின வாழ்த்து



சென்னை, மார்ச். 8

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர்எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பெண்மையைப் போற்றி வணங்கவும், பெண்கள் இன்றி இந்த உலகம் இல்லை என்பதை உணர்த்தவும், பெண்களின் தியாக வாழ்வு க்கு வணக்கம் செலுத்தவும், ஆண்டுதோறும் வருகிற 8ந் தேதி "சர்வ தேச மகளிர் தினமாக" கொண்டாடப்படு கிறது. பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் இந்த நாளில் பெண்கள் அனைவருக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது இதயமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு நூற்றாண்டுக்கு முன், பாரதி கண்ட புதுமைப் பெண்களின் வடிவமாக புரட்சித் தலைவி அம்மா திகழ்ந்ததையும், அவர்களைப் போல பல்வேறு பொதுத் தளங்களில் இயங்கும் பெண்களையும் காணுகின்றபோது மனம் பேர் உவகை கொள்கிறது.

பெண்மையின் மேன்மையைப் போற்றுவோம்!

பெண்மையை வணங்கு வோம்!

பெண்மையால் பெருமை கொள்வோம்!

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# கடலூர் அருகே ஞானமேடு கிராமத்தில் சாலைகளை சீரமைக்க வீடுகளில் கருப்பு கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்



கடலூர். மார்ச் .8

கடலூர் ஒன்றியம் நாணமேடு கிராமத்தில் இரண்டு ஆண்டுகளாக சாலைகள் சீரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக மக்கள் பயன்படுத்த இயலா நிலை இருந்து வருகிறது. சாலைகளை சீரமைக்க கோரி மாவட்ட நிர்வாகத்தை கண்டித்தும், சாலைகளை சீரமைத்து ஞானமேடு ஊர் பொதுமக்கள் வீடுதோறும் கறுப்புக்கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். இப்போராட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக மாவட்ட பொதுச் செயலாளர் சுரேஷ் பிச்சைப்பிள்ளை, கடலூர் வடக்கு ஒன்றிய தலைவர் பி.அருள், ஒன்றிய பொதுச் செயலாளர் ரகு ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 300க்கும் மேற்பட்ட ஞானமேடு கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீசர் திருக்கோயிலில் சிவராத்திரியில் சர்வதேச நாட்டியாஞ்சலி பெருவிழா



திருத்துறைப்பூண்டி, மார்ச்.8

திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீசர் திருக்கோயிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு சா்வதேச பரதநாட்டிய கலைஞா்கள் பங்குபெறும் நாட்டியாஞ்சலி பெருவிழா இன்று நடைபெறுகிறது. திருவாரூா் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் பிரசித்தி பெற்ற பிறவி மருந்தீசா் திருக்கோயில் உள்ளது. இந்த கோயிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நாட்டியாஞ்சலி பெருவிழா நாளை இன்று தொடங்கி 10ஆம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது. இதில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் 500 க்கும் மேற்பட்ட பரதநாட்டிய கலைஞகள் கலந்து கொண்டு நடனம் ஆட உள்ளனா். இதனை திருத்துறைப்பூண்டி எம்.எல்.ஏ, மாரிமுத்து தொடங்கி வைத்து பரத நாட்டிய கலைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டுகின்றார். திருக்கோயில் செயல் அலுவலர் முருகையன் தலைமை தாங்குகிறார்.நகா்மன்றத்தலைவா் கவிதாபாண்டியன், ஒன்றியக்குழுத் தலைவா் பாஸ்கா், நகராட்சி நியமனக்குழு உறுப்பினர் ஆர்.எஸ். பாண்டியன், நாட்டியாஞ்சலி பெருவிழா குழு கௌரவத் தலைவர் பொறியாளர் செல்வகணபதி ஆகியோர் முன்னில வைக்கின்றனர். நாட்டியாஞ்சலி பெருவிழா குழு செயலாளர் டாக்டர் ராஜா அறிமுக உரையாற்றுகிறார். அமைப்புச் செயலாளர் எடையூர் மணிமாறன் வரவேற்புரை ஆற்றுகிறார். சிவனடியார் திரு கூட்டமைப்பு பொறுப்பாளர் கயிலை மணி பசுபதி நன்றி கூறுகிறார். இதில் முதல் நாளான சிவராத்திரி இன்று சென்னை கிருஷ்ணப்ரியா ஜெயகர் குழுவினர் பரதநாட்டியம், தஞ்சாவூர் சௌமியா சுகன்ராஜ் குழுவினர்பரதநாட்டியம், பெங்களூா் ராஜஸ்ரீ ராமு குழுவினர் பரதநாட்டியம், மும்பை அபேக்ஷா நிரஞ்சன் குழுவினர் பரதநாட்டியம், சென்னை லலிதாகணபதி குழுவினர் பரதநாட்டியம், சென்னை ரங்காஸ்ரீ ரகுநாதன் குழுவினர் பரதநாட்டியம், பெரியகுளம் சுபஸ்ரீ சசிதரன் குழுவினர்பரதநாட்டியம், நாகப்பட்டினம் ராஜமீனாட்சி குழுவினர் பரதநாட்டியம், நாகப்பட்டினம் முத்துலட்சுமி குழுவினர்பரதநாட்டியம், நாகப்பட்டினம் இளைய ராணி விஜயகுமார் குழுவினர் பரதநாட்டியம், நாகப்பட்டினம் என்.பாலகுமார் குழுவினர்பரதநாட்டியம், திருத்துறைப்பூண்டி பாரத மாதா நாட்டியப்பள்ளி தொல்காப்பியா மணிமாறன் குழுவினர் பரதநாட்டியம், காஞ்சிபுரம் பாண்டியன் குழுவினர் பரதநாட்டியம்,சென்னை கோபிகா வர்மா குழுவினர் மோகினி ஆட்டம், மும்பை சுமனா குழுவினர்கதக், சென்னை சிக்கல் வசந்தகுமாரி குழுவினர் பரதநாட்டியம், ஹைதராபாத் டாக்டர்கே. ஸ்ரீவள்ளி மணிப்பூரிநடனம், சிதம்பரம் சத்திய பாலமுருகன் குழுவினர்பரதநாட்டியம், மும்பை பத்மினி ராதாகிருஷ்ணன் குழுவினர் பரதநாட்டியம், மும்பை டாக்டர் நரேஷ் பிள்ளை குழுவினர்பரதநாட்டியம், மன்னா்குடி குருதீபிகா விஜயசங்கா், இளங்கலைப் பரதப்பள்ளி குழுவினரின் பரதநாட்டியம், சென்னை சித்ரா & முரளிதரன் குழுவினர் பரதநாட்டியம்,சிங்கப்பூர் அரவிந்த் குமாரசாமி குழுவினர் பரதநாட்டியம், ஆஸ்திரேலியா சாய்ப்ரியா குழுவினர் பரதநாட்டியம், மங்களூர் டாக்டர் ஆரட்டி ஷெட்டி குழுவினர் பரதநாட்டியம் சீஷெல்ஸ் நாட்டின் ஆர்த்தி காளிதாசன் குழுவினர்பரதநாட்டியம், சிங்கப்பூர் தேவி வீரப்பன் குழுவினர் பரதநாட்டியம், சென்னை ஜெயந்தி சுப்ரமணியம் குழுவினர் பரதநாட்டியம் பெங்களூர் மமதாகரந்த் குழுவினர்பரதநாட்டியம், பட்டுக்கோட்டை ரமேஷ் கண்ணன் குழுவினர் பரதநாட்டியம், மன்னார்குடி அ.மாதவர்மன் குழுவினர் பரதநாட்டியம் ஸ்ரீலங்கா திவ்யா சுஜென் குழுவினர் பரதநாட்டியம், தும்குரு டி.எஸ்.சாகர் பிரசாத் குழுவினர் பரதநாட்டியம், மும்பை டாக்டர் ஜெயஸ்ரீ ராஜகோபாலன் குழுவினர் பரதநாட்டியம்,சென்னை, ஹேமாவதி கலையரசன் குழுவினர் பரதநாட்டியம், சென்னை வளர்மதி புருஷோத்தமன் குழுவினர் பரதநாட்டியம், திருவாரூர் வடிவழகி ராஜ்குமார் குழுவினர் பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு குழுவினரின் பரதநாட்டிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பரதநாட்டியத்தால் சிவ பெருமானை வழிபாடு செய்யும் மகா சிவராத்திரி பெருவிழா திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீசா் திருக்கோயிலில் புகழ்பெற்ற விழாவாக ஆண்டு தோறும் நடக்கிறது. பல்லாயிரக்கணக்கான சிவ பக்தர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் நிகழ்ச்சியாகவும், உலகிலேயே நடராஜர் சிலைக்கு முன்பாக நிரந்தர மேடை அமைக்கப்பட்டு பரத நாட்டியம் நடைபெறுவது திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீசா் கோயிலில் மட்டுமே. இதனால் பரத நாட்டிய கலைஞர்கள் உலக அளவில் இருந்து திருத்துறைப்பூண்டி திருத்தலத்தில் பரதநாட்டியம் ஆடுவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவிலான பரதநாட்டிய கலைஞர்கள் நாட்டியாஞ்சலி பெருவிழாவில் பங்கேற்பதற்கு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. விழாவிற்கான ஏற்பாடுகளை திருத்துறைப்பூண்டி நாட்டியாஞ்சலி பெருவிழா குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயபிரகாஷ், முருகன், துரை ராயப்பன் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# புலவனூர் கிராமத்தில் மாபெரும் இலவச கண்புரை அறுவை சிகிச்சை முகாம்



பண்ருட்டி மார்ச் 8

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே புலனூர் கிராமத்தில் தேசியச்சாரியார் பவனம் அண்ணாத்து அத்தை அலமேலு ஸதனத்தில் சென்னை சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை மற்றும் மருத்துவர் ரங்கரத்தினம் நினைவாக இணைந்து மாபெரும் இலவச கண்புரை அறுவை சிகிச்சை முகாம், கடந்த புதன்கிழமை முதல் வரும் செவ்வாய்க்கிழமை வரை நடைபெற்று வருகிறது. இதுகுறித்து புலவனூர் கிராமத்தில்பிறந்து அமெரிக்காவில் வசித்து வரும் மருத்துவர் ரங்க ரத்தினத்தின் மகனான பேராசிரியர் ராகவன் தெரிவித்த போது, உலகப் புகழ் பெற்ற நகரும் வாகனத்தில் அரசு அனுமதியுடன் சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை மற்றும் மருத்துவர் ரங்கரத்தினம் அவர்கள் நினைவாக இணைந்து முற்றிலும் இலவசமாக கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சைக்கு வருபவர்களுக்கு ஆப்ரேஷன், ஐ ஓ எல் லென்ஸ், கருப்பு கண்ணாடி, மருந்து அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது. உங்கள் வீடு தேடி வந்துள்ள இந்த அரிய வாய்ப்பை இந்த சுற்று வட்டார கிராம மக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் அறு சிகிச்சை முடிந்த இரண்டு மணி நேரத்தில் வீடு திரும்பலாம். கண் அறுவை சிகிச்சை முற்றிலும் தையல் இல்லாத நவீன முறையில் செய்யப்படும். இச்சேவை பொது மக்களுக்கு முழுவதும் இலவசமாக செய்யப்படுகிறது, என்றார் அவர். நிகழ்ச்சியில் புலவனூர் ஊராட்சி மன்ற தலைவர் அன்னக்கிளி சதாசிவம் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# எச்.வசந்தகுமார் மணிமண்டபத்தில் அஞ்சலி செலுத்தினார் செல்வபெருந்தகை

கன்னியாகுமரி, மார்ச். 8

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பொறுப்பேற்ற பின் முதன் முறையாக கன்னியாகுமரி மாவட்டம் வருகை தந்த செல்வபெருந்தகை, முன்னாள் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் எச். வசந்தகுமார் மணிமண்டபத்தில் அஞ்சலி செலுத்தினார்.



அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற காங்கிரஸ் துணை தலைவர் ராஜேஷ் குமார், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயலாளர் ஸ்ரீ வல்லபிரசாத், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார் மற்றும் ஏராளமான தலைவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

# சோளிங்கர் மலைக்கோவிலில் ரோப்கார் வசதி இன்று முதல் தொடங்குகிறது

ராணிப்பேட்டை, மார்ச். 8

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே உள்ள சோளிங்கரில் பிரசித்தி பெற்ற லட்சுமி நரசிம்மர் கோவில் அமைந்துள்ளது. இதில் 1,305 படிகள் உள்ளது. ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்து தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் சாமியை தரிசித்து செல்கின்றனர்.

இந்த நிலையில், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மலை மீது ஏறிச்சென்று தரிசிக்க முடியாமல் சிரமப்பட்டு வந்தனர்.

அவர்கள் எளிதில் மலைக்கு சென்று யோக நரசிம்மரை தரிசிக்கும் வகையில் ரோப்கார் அமைத்து தர வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை வைத்து வந்தனர்.



அதன்பேரில் தமிழக அரசு ரூ.9.50 கோடி மதிப்பில் ரோப்கார் அமைக்கும் பணியை தொடங்கியது. இப்பணிகள் முழுவதுமாக முடிந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரோப்கார் சோதனை ஓட்டமும் நடந்தது.

மேலும் ரோப்கார் அமைவிடத்தில் அமைச்சர் ஆர். காந்தி தலைமையிலான நன்கொடையாளர்கள் மூலம் ரூ.11 கோடி மதிப்பில் அடிப்படை வசதிகளுக்கான கட்டுமான பணிகளும் மும்முரமாக நடைபெற்று வந்தது.

இந்த பணிகளும் தற்போது நிறைவு பெற்றுள்ளது. இதையடுத்து, கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் ரோப்கார் அமைவிடத்தில் ஆய்வு செய்தனர்.

அப்போது விரைவில் ரோப்கார் பக்தர்களின் பயன்பாட்டிற்கு தொடங்கப்படும் என தெரிவித்தனர்.

லட்சுமி நரசிம்மர் மலைக் கோவிலின் ரோப்கார் சேவையை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கிறார்.

இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறையினர் செய்து வருகின்றனர்.

சென்னையிலிருந்து சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் கோவிலுக்கு செல்ல 105 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது.

சென்னையில் இருந்து ரெயில் மூலம் அரக்கோணம் வந்தால் சோளிங்கரில் உள்ள லட்சுமி நரசிம்மரை எளிதில் தரிசனம் செய்யலாம்.

இதனால் அதிகமான பக்தர்கள் சென்னையில் இருந்து வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மதுபோதையில் போக்குவரத்துக்கு இடையூறு செய்த பெண் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

மத்தூர், மார்ச். 8

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் உள்ள நகைக்கடையின் பின்புறம் கடந்த 10 நாட்களுக்கு முன்பு அடையாளம் தெரியாத நபர்கள் கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு ஓட்டை போட முயற்சித்துள்ளனர்.

கடையின் உரிமையாளர் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், சி.சி.டி.வி. கேமிராவில் பதிவான காட்சி அடிப்படையில் பழைய போச்சம்பள்ளி பகுதியை சேர்ந்த ஜெகநாதன், விக்னேஷ் மற்றும் கண்ணன் ஆகிய 3 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



இந்நிலையில் பழைய போச்சம்பள்ளி பகுதியை சேர்ந்த சுசிலா (வயது55) என்பவர் மது போதையில் போச்சம்பள்ளி 4 வழிச்சாலையில் போக்குவரத்து இடையூறாக நின்றுக்கொண்டும், படுத்துக் கொண்டும் இருந்தார். வாகன ஓட்டிகள் மீறி செல்ல முயன்றால் அவர்களை மிரட்டி வாகனத்தை தடுத்து நிறுத்தினார்.

இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் ஸ்தம்பித்து நின்றன. விபரம் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போச்சம்பள்ளி போலீசார் சுசீலாவை சமாதானம்படுத்த முயன்றனர். அப்போது எனது மகன்களான ஜெகநாதன், விக்னேஷ் மற்றும் எனது மருமகன் கண்ணன் ஆகிய 3 பேர் மீது பொய் வழக்கு போட்டு ஜெயிலுக்கு அனுப்பியதாக வாதாடினார்.

மகன்கள் மற்றும் மருமகன் ஆகியோரை போலீசார் கைது செய்ததால் அவ்வப்போது மதுபோதையில் போலீஸ் நிலையம் சென்று வாக்கு வாதத்தில் ஈடுப்பட்டு வந்த நிலையில் போச்சம்பள்ளி 4 வழிச்சாலையில் போக்கு வரத்துக்கு இடையூறாக செயல்பட்டார்.

பின்னர் சுசீலாவை போலீஸ் நிலையம் அழைத்து சென்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு ஜெயப்பிரியா பள்ளியில் இரண்டாயிரம் மாணவர்க் இணைந்து தாயின் கருவரையை போன்று உருவாக்கி நோபல் உலக சாதனை முயற்சி

விருத்தாச்சலம் மார்ச் 8

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகிலுள்ள திருப்பெயர் கிராமத்தில் இயங்கி வரும் ஜெயப்பிரியா பள்ளியில் மகளிர் தின விழா கொண்டாடபட்டது. ஜெயப்பிரிய பள்ளியின் நிர்வாக இயக்குநர் சி,ஆர், ஜெய்சங்கர் தலைமை தாங்கி முரசு கொட்டி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து பள்ளி மாணவிகளின் பரதநாட்டியம், கம்பு சுழற்றுதல், மாணவிகளின் கரத்தே நிகழ்ச்சிகளை தொடர்ந்து




2 ஆயிரம் மாணவர்கள் இணைந்து நோபல் உலக சாதனை முயற்சியாக பெண்மையை போற்றும் வகையில் தாயின் கருவரையை உருவாக்கி சான்றோர்களின் பாராட்டை பெற்றனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக ஜெயப்பிரியா குழும நிறுவனங்களின் இயக்குநர்கள் அனிதா ஜெய்சங்கர், என்,எஸ், தினேஸ், மருத்துவர்கள் தமிழரசி,சமீம் நிஹார்,செளமியா பிரசன்னா, விவசாயி சந்திரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோவை தொகுதியில் கமல்ஹாசன் போட்டியிட்டால் மீண்டும் தோற்கடிக்க பா.ஜ.க. தயார் எஸ்.ஜி.

மதுரை, மார்ச். 8

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரை கடந்த 2020 ஆம் ஆண்டில் போலீசார் விசாரணைக்காக அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த தந்தை, மகன் இருவரும் அடுத்தடுத்து பரிதாபமாக இறந்தனர்.

இந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது அப்போதைய சாத்தான்குளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன், போலீஸ்காரர் வெயிலு முத்து உள்ளிட்ட 9 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். ஒன்பது பேரும் ஜாமின் கேட்ட மனுக்கள் தள்ளுபடி ஆகி இருந்தன. இந்த நிலையில் தனது மகளுக்கு பூப்புனித நீராட்டு விழா நாளை (7ந்தேதி) நடக்க இருப்பதால் ஜாமின் வழங்க வேண்டும் என்று கூறி மதுரை ஐகோர்ட்டில் போலீஸ்காரர் வெயிலு முத்து மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி தண்டபாணி முன்பு விசாரணைக்கு வந்தது. விசாரணை முடிவில், மனுதாரருக்கு இன்று மாலை 6 மணி முதல் சனிக்கிழமை மாலை 6 மணி வரை 3 நாட்களுக்கு போலீஸ் பாதுகாப்புடன் இடைக்கால ஜாமின் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

# போலீஸ் அக்கா திட்டத்துக்கு கல்லூரி மாணவிகள் வரவேற்பு

கோவை, மார்ச். 8

கோவையில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மாநகர போலீசார் சார்பில் போலீஸ் அக்கா திட்டம் கடந்த 2022ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்துக்காக கல்லூரிக்கு ஒரு பெண் போலீஸ் வீதம் 60 போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

போலீஸ் அக்கா திட்டத்துக்கான போலீசார் அடிக்கடி சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு சென்று அங்கு படித்து வரும் மாணவிகளுடன் கலந்துரையாடி பொது இடங்களில் வாலிபர்கள் தொந்தரவு கொடுத்தால் உடனடியாக தெரிவிக்கும்படி தங்களின் செல்போன் நம்பரை கொடுத்து தைரியப்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக எண்ணற்ற கல்லூரி மாணவிகள் போலீஸ் அக்காவை தொடர்பு கொண்டு தங்களுக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவுகளை வெளிப்படையாக தெரிவிப்பதால் போலீசார் அதிரடியாக செயல்பட்டு சம்பவ இடங்களில் குற்றவாளிகளை உடனுக்குடன் கைது செய்ய முடிகிறது.



கோவையில் கல்லூரி மாணவிகளுக்கான போலீஸ் அக்கா திட்டம் மட்டுமின்றி மாநகரில் இயங்கி வரும் பள்ளிகளில் காவல்துறை சார்பில் ஆபரேஷன் ரீபூட் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பள்ளிக்கு செல்லாமல் இடைநின்ற குழந்தைகளின் பெற்றோரை போலீசார் நேரடியாக சந்தித்து பேசி, அந்த பிள்ளைகளை மீண்டும் பள்ளியில் சேர்த்து படிக்க செய்து வருகின்றனர்.

கோவை மாநகரில் அமலில் இருக்கும் போலீஸ் அக்கா மற்றும் ஆபரேஷன் ரீபூட் ஆகிய திட்டங்கள் குறித்து மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் கூறியதாவது:

கல்லூரி மாணவிகளின் பிரச்சனைகளை நட்புரீதியில் தெரிவிக்க ஏதுவாக செயல்படுத்தப்பட்டு உள்ள போலீஸ் அக்கா திட்டத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதன்மூலம் கடந்த ஆண்டு மட்டும் 400க்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டு அவற்றுக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டு உள்ளது. மேலும் மாணவிகள் தெரிவித்து உள்ள கருத்துக்களின்படி அனைத்து பஸ்களிலும் கேமரா பொருத்தும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

ஒவ்வொரு போலீஸ் நிலையங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உதவி மையம் செயல்பட்டு வருகிறது. பெண்கள் குறித்த புகார்கள் வந்தால் உடனடியாக போலீசார் புறப்பட்டு சென்று நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து மேற்கண்ட பணிகள் நடைபெறுகிறது.

பெண்களுக்கு தேவையான உடனடி நடவடிக்கைகள், சட்டரீதியான நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பை தொடர்ந்து உறுதிசெய்வது ஆகிய 3 கோணங்களில் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இதற்கான நடைமுறைகள் டிஜிட்டல் தொழில்நுட்பம் வாயிலாக பதிவுசெய்யப்படுகின்றன.

பள்ளி செல்லாமல் இடை நின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்கும் ஆபரேஷன் ரீபூட் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு பள்ளிகளுக்கும் போலீசார் நேரடியாக சென்று பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

# காரில் 80 கிலோ குட்காவை கடத்தி வந்த ராஜஸ்தான் மாநில வாலிபர்கள் 2 பேர் கைது

பவானி, மார்ச். 8

ஈரோடு மாவட்டத்தில் சமீபகாலமாக தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் புழக்கம் அதிகளவில் இருந்து வருகிறது. இதனை கட்டுப்படுத்த மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜவகர் உத்தரவிட்டார்.

இதன் பேரில் மாவட்ட முழுவதும் போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். கடைகளில் அவ்வப்போது சென்று சோதனை செய்து புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு ஈரோடு மாவட்டம் சித்தோடு அருகே நசியனூர் ரவுண்டானா பகுதியில் சித்தோடு சப்இன்ஸ்பெக்டர் பிரகாசம் மற்றும் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.



அப்போது அவ்வழியாக வந்த ஒரு காரை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். அப்போது காரின் உள்ளே மூட்டை மூட்டையாக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் இருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து காரில் இருந்த 2 வாலிபர்களை விசாரணைக்காக சித்தோடு போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். போலீசார் நடத்திய விசாரணையில் அவர்கள் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த அசோக் குமார் (34) மற்றும் கோவில் (28) என தெரிய வந்தது. 2 பேரும் தற்போது ஈரோடு கொல்லம்பாளையம் இந்திரா நகர் பகுதியில் வாடகை குடியிருந்து வந்ததும் தெரிய வந்தது.

தொடர்ந்து அவர்களிடம் நடத்திய விசாரணையில் பெங்களூரில் இருந்து கார் மூலமாக குட்கா பொருட்கள் கொண்டு வந்து ஈரோடு, பெருந்துறை, பவானி உட்பட பல்வேறு ஊர்களில் உள்ள சின்ன, சின்ன வியாபாரிகளுக்கு விற்றது தெரியவந்தது. காரில் மொத்தம் 80 கிலோ குட்காவை போலீசார் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ.70 ஆயிரத்திற்கு மேல் இருக்கும் என போலீசார் தெரிவித்தனர்.

இது குறித்து சித்தோடு போலீசார் வழக்குப்பதிவு செய்து 2 பேரையும் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 80 கிலோ குட்கா, கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ஈரோடு கிளை சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் இந்த விவகாரத்தில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா? என்பது குறித்தும் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிவராத்திரி, வார விடுமுறையையொட்டி 1,360 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, மார்ச். 8

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சிவராத்திரி மற்றும் முகூர்த்தம் வருகிற 8ந் தேதி (வெள்ளிக்கிழமை) வருவதாலும், 9, 10ந் தேதிகள் சனி, ஞாயிறு வாரவிடுமுறை தினங்கள் என்பதாலும் சென்னையில் இருந்து இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 7ந் தேதி (நாளை) வியாழக்கிழமை அன்று 270 பஸ்களும், 8ந் தேதி (வெள்ளிக்கிழமை) அன்று 390 பஸ்களும், 9ந் தேதி (சனிக்கிழமை) 430 பஸ்களும் இயக்கப்படுகின்றன.

மேலும், சென்னை கோயம்பேட்டில் இருந்து நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 8 மற்றும் 9ந் தேதிகளில் 70 பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோன்று, பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி மொத்தம் 1,360 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கு ஏற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வார இறுதியில் வியாழக்கிழமை அன்று 9 ஆயிரத்து 96 பயணிகளும், வெள்ளிக்கிழமை 7 ஆயிரத்து 268 பயணிகளும் சனிக்கிழமை 3 ஆயிரத்து 769 பயணிகளும் மற்றும் ஞாயிறுக்கிழமை 9 ஆயிரத்து 11 பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் செல்போன் செயலி (ஆப்) மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# துறையூரில் பரபரப்பு கூலி தொழிலாளி வீட்டில் நகை, பணம் கொள்ளை

துறையூர், மார்ச். 8

திருச்சி மாவட்டம் துறையூர் காந்திநகர் பகுதியை சேர்ந்தவர் வரதராஜ் (வயது 50). இவர் அதே பகுதியில் உள்ள சர்பத் கம்பெனி ஒன்றில் கூலித்தொழிலாளியாக பணிபுரிந்து வருகிறார். இவரது மனைவியும், மகளும் ஏற்கனவே இறந்து விட்டனர். மகன் தேவ பிரசாத் (27) சென்னையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் தனியாக வசித்து வரும் வரதராஜ் சம்பவத்தன்று காலை, தனது வீட்டைக் பூட்டிவிட்டு வேலைக்கு சென்றார். பின்னர் மதியம் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீடு உட்புறமாக தாழ் இடப்பட்டிருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த வரதராஜ் வீட்டின் கதவினை உடைத்து உள்ளே சென்று பார்த்தார்.

அப்போது யாரோ மர்ம நபர்கள் மறைவான பகுதியில் வைக்கப்பட்டிருந்த சாவியை எடுத்து கதவை திறந்து உள்ளே சென்ற தோடு, பீரோவை திறந்து அதில் இருந்த சுமார் 8 1/2 பவுன் எடையுள்ள தங்க நகை மற்றும் ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் ஆகியவற்றை திருடி சென்றது தெரிய வந்தது. மேலும் வீட்டின் பின்புறமாக வந்த மர்ம நபர்கள் மூங்கில் குச்சியை பயன்படுத்தி, வீட்டின் மீது ஏறி ஓட்டினை பிரித்து, உள்ளே சென்று வீட்டின் கதவினை உட்புறமாக தாள் போட்டு விட்டு திருடி சென்றது தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பாக வரதராஜ் அளித்த புகாரின் பேரில் துறையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் திருச்சியில் இருந்து மோப்பநாய் மற்றும் தடய அறிவியல் துறையினர் மூலம் தடயங்கள் சேகரிக்கப்பட்டது. துறையூரின் மைய பகுதியில் அடுத்தடுத்து வீடுகள் நெருக்கமாக உள்ள பகுதியில் பட்டப்பகலில் திருடு போன சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
8.3.2024

# கேரளா அரசாங்கத்தின் புதிய ஒடிடி தளம்

மலையாள சினிமாவின் கதைகளின் எப்போதும் மக்களின் பிரச்சனைகளையும், சமூதாய பிரச்சனைகளையும் அதிகமாக பேசக்கூடியவை.

பெரும் பெரும் பொருட் செலவில் எடுக்கப்படும் பிற மொழி பல படங்களுக்கு போட்டி போடும் அளவில் எளிமையான படங்களை முந்நிறுத்தி வருபவர்களை அள்ளும் திறன் கொண்டது மலையாள சினிமா.அதற்குஉதாரணமாகசமீபத்தில்வெளியாகிய பிரமயுகம்,மஞ்சும்மல் பாய்ஸ். ப்ரேமலு போன்ற படங்களே சாட்சி.

இப்போது அதற்கு மேலும் ஒரு மகுடம் சூடும் விதமாககேரளாஅரசாங்கம்ஒருமுயற்சிஎடுத்துள்ளது. கேரளா அரசாங்கம் இந்தியாவில் முதன் அரசாங்கத்திற்கு சொந்தமான ஒடிடி தளத்தை தொடங்கஉள்ளது.இதுவரைஒடிடிதளங்கள்என்றால் பெருன்பான்மையாக இருப்பது அமேசான் ப்ரைம் வீடியோ, நெட்ஃபிலிக்ஸ், zee 5,ஹாட் ஸ்டார்,ஆஹா போன்றவைகள்தான். கேரளா அரசாங்கம் வெளியிட போகும் அந்த ஒடிடி தளத்திற்கு சிஸ்பேஸ் என்று பெயரிட்டுள்ளனர்.

கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் கைராலி தியேட்டரில் சிஸ்பேஸ் ஒடிடி தளத்தை துவங்கி வைக்க இருக்கிறார். சிஸ்பேஸ் ஒடிடி தளம் உருவாக்கிய நோக்கத்தைப் பற்றி செய்தியாளர்களிடம்"சிஸ்பேஸ் OTT துறையில் வளர்ந்து வரும் ஏற்றதாழ்வுகள் மற்றும் உள்ளடக்கத் தேர்வு மற்றும் பரப்புதல் ஆகியவற்றின் அடிப்படையில் பலதரப்பட்ட சவால்களுக்கு ஒரு பிரதிபலிப்பாகும்" என்று கேரள மாநில திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் (KSFDC) தலைவருமான ஷாஜி என் கருண் கூறினார்.

சிஸ்பேஸ் ஒடிடி தளம் KSFDC என்ற மாநில திரைபட மேம்பாட்டு கழகத்தால் நிர்வகிக்க படும் எனவும்,மலையாள சினிமாவையும், மலையாள திரைத்துறையையும்மேம்படுத்த இந்த முயற்சி முதல் படியாக இருக்கும் எனவும்,இதுதளத்தில் எந்த படங்கள்இடம்பெற வேண்டும் என்பதை 60 நபர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர்.




# பாடகர் மனோவுக்காக இதுவரை செய்யாததை செய்த நண்பர் வெண்ணிற ஆடை மூர்த்தி





சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி சீனியர், ஜூனியர் என இரு பிரிவுகளாக இளைஞர்களுக்கும், சிறு வயதினருக்குமாக நடைபெறுகிறது. தற்போது சீனியர்களுக்கான சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் 10வது சீசன் துவங்கி, கோலாகலமாக நடந்து வருகிறது. இந்நிகழ்ச்சியில் பாடகர்கள் சுஜாதா, மனோ, அனுராதா மற்றும் இசையமைப்பாளர் ஷான் ரோல்டன் ஆகியோர் நீதிபதிகளாகப் பங்கேற்றுள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில், கடந்த வாரம் பாடகர் மனோவின் 40 வருட திரைப்பயணத்தை கொண்டாடும் வகையில், மனோ ஸ்பெஷல் சுற்று நடத்தப்பட்டது. இதில் சூப்பர் சிங்கர் சீனியர் போட்டியாளர்கள் ஒவ்வொருவரும், மனோவின் பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடினர்.

மனோவை கௌரவிக்கும் விதமாக, இசைத் துறையிலிருந்து இசையமைப்பாளர் சிற்பி, மால்குடி சுபா, உன்னிமேனன், கல்பனா முதல், பல இசை மேதைகள் கலந்துகொண்டனர். இதுவரை எந்த ஒரு மேடையிலும் அதிகமாகக் கலந்துகொள்ளாத, திரை ஆளுமை மனோவின் நண்பர், நடிகர் வெண்ணிற ஆடை மூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மனோவின் பாடல்களைக் கொண்டாடும் விதமாக சூப்பர் சிங்கர் ஜூனியர் முன்னாள், சீசன் 9 மற்றும் 10 போட்டியாளர்கள் இணைந்து, மனோவிற்காக ஒரு சிறப்புச் சங்கீத நிகழ்வை அரங்கேற்றினர். இதில் மனோவின் மகன், மனைவி உட்பட குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

இறுதியாக பாடகர் மனோ, இது என் வாழ்வில் மிக முக்கியமான மறக்கமுடியாத சந்தோச தருணம் என்று தெரிவித்ததோடு, இந்நிகழ்ச்சியில் மிக அற்புதமாகப் பாடிய சஞ்சீவ் எனும் பாடகருக்குத் தனது கைக்கடிகாரத்தைப் பரிசளித்தார்.

# 'தக் லைப்' செர்பியாவில் முகாமிட்டுள்ள மணிரத்னம்



இயக்குனர் மணிரத்னம் 36 ஆண்டு இடைவெளிக்குப்பின், நடிகர் கமல்ஹாசனுடன் இணைந்து 'தக் லைப்' என்ற புதிய ஆக்ஷன் படத்தை இயக்கி வருகிறார். திரிஷா, ஜெயம் ரவி, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லெக்ஷ்மி, கௌதம் கார்த்திக் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடிக்கின்றனர். இசைப்புயல்

ஏ.ஆர்.ரஹ்மான் படத்துக்கு இசையமைக்கிறார். இப்படத்தை கமலின் ராஜ்கமல் நிறுவனம் தயாரிக்கிறது. ஆக்சன் படமாக உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்புகள் சமீபத்தில் தொடங்கப்பட்டதாக படக்குழுவினர் வீடியோ ஒன்றை வெளியிட்டு அறிவித்திருந்தனர். ஆரம்பகட்ட படப்பிடிப்புகள் சென்னையில் 5 நாட்கள் நடந்தது.

இந்நிலையில், 'தக் லைப்' படத்தின் அடுத்தக்கட்ட படப்பிடிப்பிற்காக லொகேஷன் பார்க்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதற்காக, மணிரத்னம் செர்பியாவில் முகாமிட்டுள்ளார். படப்பிடிப்பு தளத்தில் படக்குழுவுடன் மணிரத்னம் இருக்கும் புகைப்படங்கள் இணையதளத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

இந்த படத்தில் நடிகர் கமல் தற்காப்பு கலை திறன்களை வெளிப்படுத்துகிறார். பழங்கால வரலாற்று ஆயுதங்களுடன் எதிரிகளுடன் மோதும் பயங்கர சண்டை காட்சிகள் அதிர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைய இருக்கின்றன. மணிரத்னம்கமல் லட்சிய படமான 'தக் லைப்' படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. மேலும் இப்படத்தின் பிரமாண்ட வெளியீட்டிற்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

# காதலியை பார்க்க 3500 கி.மீ. பயணித்த நடிகர் ஜி.எம்.குமார்



சென்னையை சேர்ந்தவர் நடிகர் ஜி.எம்.குமார். இவர் இயக்குனர், தயாரிப்பாளர், எழுத்தாளர் என பன்முகத் தோற்றம் கொண்டவர். 1986ல் சிவாஜி புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் பிரபு நடித்த அறுவடை நாள் என்ற படத்தில் இயக்குனராக சினிமாவில் அறிமுகமானார். அதைத்தொடர்ந்து பிட் பாக்கெட், இரும்பு பூக்கள், உருவம் போன்ற பல படங்களை இயக்கினார். 1993ல் 'கேப்டன் மகள்' என்ற படம் மூலம் நடிகரானார். அதன் பின் பல முன்னணி நடிகர்களின் படத்தில் நடித்தார். மேலும் கொலைக் காட்சி தொடர்களிலும் நடித்தார். பல படங்களை தயாரித்து இயக்கியதால் அதில் தோல்வி ஏற்பட்டு நஷ்டம் அடைந்தார். அதனால் சில வருடம் சினிமா பக்கம் செல்லாமல் இருந்தார். அதன்பின் 'வெயில்' படம் இவருக்கு திருப்புமுனை ஏற்படுத்தியது. முதல் படத்தில் நடித்த நடிகை பல்லவியை அப்போது அவர் காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில் ஜி.எம்.குமார் 'எக்ஸ்' இணைய தளத்தில் 'எனது முன்னாள் காதலியை பார்க்க 3 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் கார் ஓட்டிச் சென்றேன். சென்னை, பெங்களூரு, கோவா மும்பை அதன் பின் சென்னை' என்று பதிவிட்டுள்ளார். மேலும் தனது முன்னாள் காதலியுடன் இருக்கும் படத்தையும் அவர் பகிர்ந்துள்ளார். அந்த பதிவு தற்போது பலரது கவனத்தையும் ஈர்த்து வருகிறது.இது குறித்து இணைய தளத்தில் நெட்டிசன்கள் பலர் பலவித விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

# சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றார் ஜோதிகா

மார்ச் 4 ஆம் தேதி தமிழக அரசு 2015 ஆம் ஆண்டுக்கான திரைத்துறை விருதுகள் பட்டியலை வெளியிட்டது. அதில் "36 வயதினிலே" படத்தில் நடித்த ஜோதிகாவுக்கு சிறந்த நடிகைக்கான விருது பட்டியலில் இடம் பெற்றது. "36 வயதினிலே" எனும் படம் 2015 ஆம் ஆண்டு ரோசன் ஆண்ட்ரூஸ்சால் இயக்கப்பட்டு,சந்தோஷ் நாரயணன் இசையில்,2டி எண்டர்டெய்ன்மண்ட் நிறுவனம் தயாரித்தது. இத்திரைப்படத்தில் ஒரு கனவை தொலைத்த நடுத்தர பெண்ணின் வலியையும், அவளுக்கு கிடைக்க பெறாத ஆசைகளையும், தனது சிறந்த நடிப்பால் ரசிகர்களின் உணர்வுகளை கவர்ந்திருப்பார். இப்படம் ஆஹா ஒடிடி தளத்தில் இருக்கிறது. இந்நிலையில், முத்தமிழ் மன்றத்தில் நடைபெற்று வரும் இவ்விழாவில் மாநில செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் எம்.பி.சுவாமிநாதன் மற்றும் சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம், "36 வயதினிலே" படத்திற்காக சிறந்த நடிகைக்கான விருதை ஜோதிகாவுக்கு வழங்கினர்.

# இங்கிலாந்துக்கு எதிராக இந்தியாவின் அதிரடி நீடிக்குமா? கடைசி டெஸ்ட் தர்மசாலாவில் தொடக்கம்



பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில்சுற்றுப்பயணம்செய்துவிளையாடிவருகிறது. இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் கொண்ட தொடரில் ஐதராபாத்தில் நடந்த முதல் போட்டியில் இந்திய அணி 28 ரன் வித்தியாசத்தில் அதிர்ச்சிகரமாக தோற்றது.

இதற்கு விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 2வது டெஸ்டில் 106 ரன் வித்தியாசத்தில் வென்று பதிலடி கொடுத்தது. ராஜ்கோட்டில்நடந்த3வதுபோட்டியில்434ரன்வித்தியாசத்திலும், ராஞ்சியில்நடந்த4வதுபோட்டியில்5விக்கெட்வித்தியாசத்திலும் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. 4 டெஸ்ட் முடிவில் இந்திய அணி 31 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்தியாஇங்கிலாந்து அணிகள் மோதும் 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இமாசலபிரதேச மாநிலம் தர்மசாலாவில் நாளை (7ந் தேதி) தொடங்குகிறது. ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணியின் அதிரடி இந்த டெஸ்டிலும் நீடிக்குமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த போட்டியில் தடுமாற்றத்துடன் வெற்றி கிடைத்தது . சுப்மன் கில்ஜூரல் ஜோடி தோல்வியில் இருந்து மீட்டு அணியை வெற்றி பெற வைத்தது. காயம் காரணமாக கே.எல். ராகுல் இந்த போட்டியிலும் ஆடவில்லை. அவர் முதல் டெஸ்டில் மட்டுமே விளையாடினார். கடந்த டெஸ்டில் ஓய்வு அளிக்கப்பட்ட முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ரா அணிக்கு திரும்பியுள்ளார். அவர் 3 டெஸ்டில் 17 விக்கெட் கைப்பற்றி இருக்கிறார்.

பேட்டிங்கில் தொடக்க வீரர் ஜெய்ஸ்வால் மிகவும் நல்ல நிலையில் உள்ளார். அவர் இரண்டு இரட்டை சதத்துடன் இந்த தொடரில் 655 ரன் குவித்து முதல் இடத்தில் உள்ளார். சுப்மன் கில் (342 ரன்), ரோகித் சர்மா (297) ஆகியோரும் சிறப்பாக ஆடி வருகிறார்கள். புதுமுக வீரர் துருவ் ஜுரல் கடந்த 2 டெஸ்டிலும் (175) தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி கொண்டார். பும்ரா, அஸ்வின் (17விக்கெட்) குல்தீப் யாதவ் (12), முகமது சிராஜ் ஆகியோர் பந்துவீச்சில் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆல்ரவுண்டர் பணியில் ஜடேஜா சிறப்பாக செயல்படுகிறார். அவர் 6 இன்னிங்சில் ஒரு சதத்துடன் 217 ரன் எடுத்துள்ளார். 17 விக்கெட் வீழ்த்தியுள்ளார். அஸ்வின், ஜடேஜா, குல்தீப் யாதவ் ஆகியோரின் சுழற்பந்து கூட்டணியே அணிக்கு பலமாக கருதப்படுகிறது.

ஆகாஷ் தீப் இடத்தில் பும்ரா இடம் பெறுவார். மோசமாக விளையாடி வரும் ரஜத் படிதார் நீக்கப்பட்டால் தேவ்தத் படிக்கலுக்கு வாய்ப்பு கிடைக்கும்இ ங்கிலாந்து அணி இந்த டெஸ்டிலாவது வெற்றி பெற்று இந்தியாவுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளது.

அந்த அணியில் கிராவ்லி ( 328 ரன்) , டக்கெட் ( 314), ஆலி போப் ( 285), ஜோ ரூட் ( 210), ஹார்ட்லே ( 20 விக்கெட்), ரேகான் அகமது (11), ஆண்டர்சன் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர். இரு அணியும் நாளை மோதுவது 136வது டெஸ்டாகும். இதுவரை நடந்த 135 போட்டியில் இந்தியா 34ல், இங்கிலாந்து 51ல் வெற்றி பெற்றுள்ளன. 50 டெஸ்ட் 'டிரா' ஆனது. நாளைய டெஸ்ட் போட்டி காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது. ஸ்போர்ட்ஸ் 18 சேனலில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# நாட்டு நாட்டு பாடலுக்கு நடனம் ஆடிய சச்சின், சூர்யா, ராம் சரண், அக்ஷய்

சென்னை, ஐதராபாத், பெங்களூரு, மும்பை, கொல்கத்தா மற்றும் ஸ்ரீநகர் ஆகிய ஆறு அணிகள் பங்கேற்கும் டி10தொடர்இந்தியாவில்இன்று தொடங்குகிறது. இந்த தொடர்ஐஎஸ்பிஎல் என்கிற பெயரில்நடத்தபடுகிறது. இந்த போட்டி 10 ஓவர்களை கொண்டது. இந்த போட்டிகள் முழுவதும் டென்னிஸ் பந்தில் தான் நடத்தப்பட உள்ளது.

மார்ச் 6ந் தேதி முதல் 15ந் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த ஐ.எஸ்.பி.எல் தொடரில் பங்கேற்கும் ஒவ்வொரு அணியையும் சினிமா பிரபலங்கள் வாங்கி வருகின்றனர். அந்த வகையில் மும்பை அணியை அமிதாப் பச்சனும், பெங்களூரு அணியை பாலிவுட் நடிகர் ஹிருத்திக் ரோஷனும், ஸ்ரீநகர் அணியை அக்ஷய் குமாரும், ஐதராபாத் அணியை தெலுங்கு நடிகர் ராம்சரணும் வாங்கினர்.

இந்த தொடரின் முதல் போட்டியில் அமிதாப் பச்சன் அணியும் அக்ஷய் குமார் அணியும் மோதுகின்றனர். இதன் தொடக்க விழாவில் சச்சின், ராம் சரண், சூர்யா, அக்ஷய் குமார் ஆகியோர் உலக அளவில் பிரபலமான நாட்டு நாட்டு பாடலுக்கு நடனம் ஆடினர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# ஐசிசி டெஸ்ட் தரவரிசை: டாப் 10ல் இடம் பிடித்த இந்திய இளம் வீரர்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்(ஐசிசி) இன்று டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர்கள் முன்னேற்றம் கண்டிருந்தாலும், ஆஸ்திரேலிய அணி பேட்டர்கள் பின்னடைவை சந்தித்துள்ளனர். அதன்படி ஆஸ்திரேலிய அணியின் ஸ்டீவ் ஸ்மித், டிராவிஸ் ஹெட், மார்னஸ் லபுஷாக்னே ஆகியோர் பின்னடைவை சந்தித்துள்ளனர்.

இங்கிலாந்தின் ஜோ ரூட் 2ம் இடத்திற்கு முன்னேறியுள்ளார். மேலும் 2ம் இடத்தில் இருந்த ஸ்டீவ் ஸ்மித் ஒரு இடம் பின் தங்கி 3ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். அதேசமயம் இந்திய அணியின் நட்சத்திர வீரர்கள் விராட் கோலி, யஷஸ்வி ஜெய்ஸ்வால், ரோகித் சர்மா ஆகியோர் முன்னேற்றம் கண்டுள்ளனர். டாப் 10 2 இந்திய வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். யஷஸ்வி ஜெய்ஸ்வால் 2 இடங்கள் முன்னேறி முதல் முறையாக 10ம் இடத்திற்கு முன்னேறி அசத்தியுள்ளார். விராட் கோலி 1 இடம் முன்னேறி 8வது இடத்தையும் ரோகித் 2 இடங்கள் முன்னேறி 11வது இடத்தை பிடித்துள்ளனர்.


டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இந்திய வீரர்கள் ஜஸ்ப்ரித் பும்ரா மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் தொடர்ந்து முதல் இரு இடங்களை தக்கவைத்துள்ளனர். நியூசிலாந்து தொடரில் சிறப்பாக பந்துவீசிய ஆஸ்திரேலிய அணியின் ஜோஷ் ஹசில்வுட் 4ம் இடத்திற்கும், நாதன் லையன் 6ம் இடத்திற்கும் முன்னேறியுள்ளனர். அதேசமயம் ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் பாட் கம்மின்ஸ் 5ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

மேலும் ஆஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி வீரர் கிளென் பிலிப்ஸ் அரைசதம் கடந்ததுடன், 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தியதன் மூலல் டெஸ்ட் ஆல்ரவுண்டர்களுக்கான தரவரிசையில் 12 இடங்கள் முன்னேறி 12வது இடத்தைப் பிடித்துள்ளார்.

இப்பட்டியலின் முதல் இரண்டு இடங்களில் இந்திய வீரர்கள் ரவீந்திர ஜடேஜா மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் உள்ளனர்.

# இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட்: ஆடும் லெவனை அறிவித்த இங்கிலாந்து

இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் 31 என்ற கணக்கில் இந்திய அணி தொடரை கைஅப்பற்றி உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாளை தர்மசாலாவில் தொடங்க உள்ளது. இந்தியா ஏற்கனவே தொடரை கைப்பற்றி விட்டாலும், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு இந்த டெஸ்டின் மூலம் கிடைக்கும்புள்ளிஇருஅணிகளுக்கும்முக்கியமானதாகும். எனவே இந்த போட்டியில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாக போராடும் என்பதால் ரசிகர்கள் மத்தியில் இது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் இந்த போட்டிக்கான ஆடும் லெவனை இங்கிலாந்து அறிவித்துள்ளது. அதில் ஒரே ஒரு மாற்றமாக கடந்த போட்டியில் விளையாடிய ஒல்லி ராபின்சன் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக மார்க் வுட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஜாக் கிராலி, பென் டக்கெட், ஒல்லி போப், ஜோ ரூட், ஜானி பேர்ஸ்டோவ், பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), பென் போக்ஸ், டாம் ஹார்ட்லி, மார்க் வுட், ஜேம்ஸ் ஆண்டர்சன், சோயிப் பஷீர்.



அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்

விளக்கம்:
பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடையச் சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
86670 25357
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.